முருகப்பெருமான் துணை

**மகான் மௌனச்சித்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.06.2022**, திங்கட்கிழமை

1. வளம்தரும் ஞானபலம் தரும்
வள்ளலே வாழும் ஞானியே
வலம்வரும் மக்கள் படையை
வழிநடத்தி ஞானி ஆக்கும் தவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தானுன் பெருமை தனை கூறி
அவனியிலே அருளாசி தன்னை
அறிவிப்பேன் சுபகிருது விடை திங்கள்
3. திங்களிலே மூவேழீர் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 23 ம் நாள், 06.06.2022 திங்கட்கிழமை)
தேசிகனுக்கு மௌனச்சித்தர் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்காரக்குடில் படைத்த ஞானி
4. ஞானி அரங்கன் காட்டுகின்ற
ஞானமே உலகை மாற்றும்
கனிவேலவன் சூட்சும வழியாகும்
கண்டு உலகோர் தொடர்ந்து வர
5. வருகவே நிலைமைகள் யாவும்
வள்ளல் தன்மையாக மாறும்
தரும சிந்தையாக மாறியும்
தரணியே பாதுகாப்புதனை பெறும்
6. காப்புத்தரும் கலியின் தவசி
கண்டுரைப்பேன் அரங்கனே என
ஒப்புகொண்டு மக்கள் வணங்கிட
ஓங்காரக்குடில் சரணடைவு கண்டிட
7. கண்டிட இயற்கை வகையும்
கட்டாயம் பாதுகாப்பும் பெருகி
உண்டான பிற தொழில் வகையும்
உயர்வு கூடி கழனி கிருஷி என
8. என அனைத்துத் துறைகளும்
எல்லா வகையிலும் தேறியே
தனவளம் அருள் பொருள்வளம்
தரணியோர்க்கு மிகுதியாகி இனிதே
9. இனிதே உலக மாற்றம்
இயம்பிடுவேன் அரங்கன் சேவைவழி
துணிவான அரங்கமகானின்
தொண்டர் படை வகைதனிலும்

10. வகைதனில் உலகம் அமைதி
வல்லமை மேன்மை கண்டு
பகை வஞ்சம் இன்னலில்லா
பாதுகாப்பு நிறைந்த பூமியாகி

11. ஆகியே ஞானவான்கள் தலைமை
அளவிலா கண்டு உலகம்
மகிழவே ஞான ஆட்சி பெறும்
மொழிந்திட்ட அருளாசி முற்றே

—சுபம்—